• Employment Law • Wrongful Dismissal
• Severance Packages • Human Rights
• Landlord and Tenant Law • Employment Standards
Aravinth Jegatheesan
Barrister and Solicitor
437.229.9643
ARAVINTH LAW

30 ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221

நதி: 30 | பாலம்: 11 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | June 01, 2020

# இரண்டுவார சுகவீனகால விடுமுறை!

பத்து நாட்கள் சம்பளத்துடன் கூடிய சுகவீனகால விடுமுறை தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும் என, தான் மாகாண மற்றும் பிரதேச அரசுகளிடம் வலியுறுத்த உள்ளதாகக் கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ 2020 மே 25இல் தெரிவித்தார்.

“தொழிலாளர் எவரும் உடல்நலக்குறைவால் ஒரு நாள் வேலைக்குச் செல்லாமல் விடுவதா அல்லது தமது செலவுகளுக்கு பணம் தேவை என்பதால் உடல் நலக் குறைவுடனே வேலைக்குச் செல்வதா, எனத் தெரிவுசெய்ய வேண்டிய நிலையில் இருக்கக்கூடாது. இதனால்தான் நாங்கள் கோவிட்-19 தொற்றுநோயின் பிடியிலிருந்து விடுபட்டு மீண்டும் தொழிலுக்குச் செல்லவிருக்கும் நிலையில் கனடாவில் உள்ள ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஒரு வருடத்திற்குப் பத்து நாட்கள் சம்பளத்துடன் கூடிய சுகவீனகால விடுமுறை கிடைப்பதை உறுதி செய்யக் கனேடிய மத்திய அரசு தாமதமின்றி மாகாண மற்றும் பிரதேச அரசுகளுடன் கலந்துரையாடல்களைத் தொடரும். நோய் காரணமாக நீண்ட நாட்கள் சுகவீனகால விடுமுறை எடுக்க வேண்டிவரும் தொழிலாளர்களை ஆதரிப்பதற்காகப் பிறவழிகளைப்பற்றியும் கலந்துரையாடல்களில் கலந்து ஆலோசிப்போம்” எனக் கனேடியப் பிரதமர் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

பிரிட்டிஸ் கொலம்பியா மாகாண முதல்வர் John Horgan பல வாரங்களாகப் பிரதமரை நாடு தழுவிய ஒரு சுகவீனகால விடுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என வலியுறுத்தி வந்தார். பிரதமரின் மாகாண மற்றும் பிரதேச முதல்வர்களுக்கான வாராந்தத் தொலைபேசிக் கலந்துரையாடல்களில் கடந்த இரண்டு வாரங்களும் John Horgan இந்த நாடு தழுவிய சுகவீனகால விடுமுறை அறிவிப்புப் பற்றி வலியுறுத்தி வந்திருந்தார். தனது வேண்டுகோளை ஏற்றுக் கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ இந்த அறிவிப்பை மே



25இல் வெளியிட்டதற்குப் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண முதல்வர் பிரதமருக்கு நன்றி தெரிவித்தார்.

“இது தொடர்பாக மத்திய அரசு செய்வதற்கு இன்னும் நிறைய வேலைகள் உள்ளன. எமது வேண்டுகோளை மத்திய அரசு ஏற்று நாடு முழுவதும் உள்ள தொழிலாளர்களுக்கு வருடத்துக்குப் பத்து நாட்கள் சம்பளத்துடன் கூடிய சுகவீனகால விடுமுறை கிடைப்பதை உறுதி செய்ய மத்திய அரசு முன்வந்தது தொழிலாளர்களுக்கு நம்பிக்கையை வழங்கும். இது அவர்களுக்கு ஒரு பாதுகாப்பான உணர்வைக் கொடுக்கும்” எனப் பிரிட்டிஸ் கொலம்பியா மாகாண முதல்வர் ‘Vancouver Sun’ ஊடகத்துக்கு மே 26இல் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில், “மத்திய அரசு இத்திட்டத்திற்கு முழுமையாக நிதி அளிக்குமா அல்லது மாகாண அரசையும் இச்செலவில் பங்குகொடுக்குமாறு கேட்குமா என்று தெரியவில்லை. ஆனால் பிரிட்டிஷ் கொலம்பியா அரசு இதற்கான நிதியை வேலைவாய்ப்புக் காப்புறுதித் திட்டத்தில் (EI) இருந்து பெறுமாறு ஆலோசனை வழங்கியுள்ளது. ஏனெனில் ஏற்கனவே வேலைவாய்ப்புக் காப்புறுதி, தொழிலாளர்களின் நீண்ட நாட்கள் சுகவீனகால விடுமுறைக்குப் பண உதவி வழங்குகிறது” என்று முதல்வர் John Horgan கூறினார்.

கனேடிய மத்திய அரசு கோவிட்-19 தொற்றுநோய்ப் பரவல் காலத்தில் நாடாளுமன்றம் கூடுவதை வாரத்திற்கு மூன்று முறையாகக் குறைத்திருந்தது. வாரத்திற்கு ஒரு முறை குறைந்த அளவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்குச் சமூகமளித்துப் பங்குபற்றுவர். இந்த அமர்வில் ஆகக் கூடியது 36 நாடாளுமன்ற உறுப்பினர்களே பங்குபற்றுவர். மற்றைய இரண்டு முறையும் நாடாளுமன்ற உறுப்பினர் இணையம் மூலம் பங்குபற்றுவர். இவ்வாறான நடைமுறைக்கு அப்போது எல்லாக் கட்சிகளும் இணங்கி இருந்தன. ஆனால் அவ்வாறான இணக்கம் மே 25 வரையுமே நடைமுறைப்படுத்த வேண்டும் என அப்போது தீர்மானிக்கப்பட்டது.

இதனால் மத்திய அரசு மே 25இற்குப் பின்னர் நாடாளுமன்றம் கூடுவதற்குத் தனது புதிய பிரேரணையை முன்மொழிந்துள்ளது. இதன்மூலம் ஜூன் 17ஆம் திகதி வரையும் வாரத்திற்கு

(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)

Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPORTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877

Lexus of Richmond Hill
குமார் ஜெகசோதி
Tel. 905.883.8812
Cell: 416.451.0565
Kumar Jegasothy
Sales Consultant
11552 Yonge Street
Richmond Hill, ON L4E 3N7
www.lexusrh.com

BUY & SELL REAL ESTATE..
Pat Pushpakanthan
Full Time Broker
416 894-1187
19 Years exp
Listing Deal!!
HALL OF FAME
Century 21 416-290 1200

Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com

DENTAL OFFICE
3351 Markham Road, Unit #129
Markham & Steeles
Tel: 416.609.2022
3150 Eglinton Ave East, Unit #5
Markham & Eglinton
Tel: 416.264.3232
Dr.Iru Vijayanathan
BDS, FAGD, MFDS RCPS(Glasg.)
Dental Surgeon
Dentistry for children, adults and seniors

உவகை
மணமக்கள் இணைப்பு
Uvakai
Marriage Broker
Valvai Zagara
647.885.6104

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Sukumar Selvaratnam
Realtor
416.624.4803
suku07@hotmail.com
HOMELIFE

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
Toll Free: 1-844-878-2721 Fax: 647-351-3099
mortgage@nesan.ca www.nesan.ca
1585 Markham Rd, Unit #407A, Toronto, M1B 2W1
SUBRA MORTGAGES INC.

வீடு வாடகைக்கு...
வாங்க/ விற்க...
Rathiga Thillaivannan
Dir: 647.839.0079
rathiga24@hotmail.com




# மஹா கும்பத்திருவிழா – ஹரித்வார் 2021

மஹா கும்பத்திருவிழா ஒவ்வொரு பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்தியாவில் அலகாபாத், ஹரித்வார், உஜ்ஜைன் மற்றும் நாசிக் ஆகிய நான்கு இடங்களில் உள்ள ஆற்றுப்படுகையில் கொண்டாடப்படுகிறது. இந்த நான்கு



புண்ணிய ஸ்தலங்களில் இந்தத் திருவிழா நடத்துவதற்குக் காரணம் யாதெனில், ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய காலத்தில் ஒற்றுமையுடன் இருந்த தேவர்களும் அசுரர்களும் அமிர்த பானத்தினை பாற்கடலில் இருந்து எடுத்தபோது, அமிர்த பானம் இருந்த கிண்ணத்தை அசுரர்கள் களவாடிச் செல்கின்றனர். இவர்களைத் துரத்திச் செல்லும் தேவர்கள் வானுலகில் பன்னிரண்டு நாட்களும் மற்றும் பன்னிரண்டு இரவுகளும், அதாவது 12 ஆண்டுகளுக்குச் சமமாகப் போர் செய்தனர். அச்சமயம் வானுலகில் இருந்து அமிர்தபானத்தில் சில சொட்டுகள் பூலோகத்திலுள்ள இந்த நான்கு இடங்களில் விழுந்ததாகவும் ஆகவே மஹா கும்பத்திருவிழா ஒவ்வொரு பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்து சமயத்தினரால் இங்கு கொண்டாடப்படுகிறது.

கி. பி. 16ஆம் நூற்றாண்டிலிருந்து இக் கும்பத்திருவிழா நடத்தப்படுகின்றது. இருப்பினும் 2021ஆம் ஆண்டில் கும்பத் திருவிழா சப்தபுரி மற்றும் ஏழு முக்தி தேசங்களில் ஒன்றான ஹரித்வாரில் கங்கை நதிக் கரையில் நடக்க இருக்கிறது. இந்த விழாவிற்கான சரியான திகதியை இந்து சோதிட சாத்திரத்தில் சொல்லப்படுவதை அடிப்படையாக வைத்துத் தீர்மானிக்கப்படுகிறது. அதாவது குருபகவான் கும்ப ராசியிலும், சூரிய பகவான் மேச ராசியிலும் பிரவேசிக்கின்ற நாளில் கும்பத்திருவிழா கொண்டாடப்படுவது வழக்கமாகும்.




இங்கு புனித நீராடுதல் 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14ஆம் திகதி மகர சங்ராந்தியில் இருந்து தொடங்கி மே மாதம் இறுதிவரை அனைத்து நாட்களிலும் புனிதமாகக் கருதப்பட்டாலும் சில குறிப்பிட்ட நல்ல குளியல் திகதிகள் உள்ளன. அந்நாட்கள் யாதெனில்: 14 மற்றும் 28 ஜனவரி, 11, 16 மற்றும் 27 பெப்ரவரி, 11, 13 மற்றும் 28 மார்ச், 11, 12. 13, 14, 21 மற்றும் 27 ஏப்ரல், 11 மற்றும் 26 மே மாதங்களில் நடைபெறும். ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் நாகா சாதுக்கள், சன்னியாசிகள் மற்றும் உள்ளூர்வாசிகள் அதிகமாக நீராடுவதால் இங்கு அதிக கூட்டங்களைக் காணலாம். ஆகையால் மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்கள் புனித நீராடுதலுக்கு உகந்ததாகும். இங்கு கங்கை நதியில் ஹரிக்கி பௌரி என்னும் இடத்தில் உள்ள பிரம்ம குண்டத்தில் கங்கா ஸ்நானம் செய்வதன் மூலம் நாம் அறிந்தோ அறியாமலோ செய்த பாவங்களிலுருந்து விலகுவதுடன் புண்ணியத்தைப் பெற்று நாம் மோட்ச பதவியைப் பெறலாம் என்பது நம்பிக்கை.

ஹரித்வாருக்கு டெல்லியில் இருந்து ரயில் அல்லது சொகுசு வாகனம் மூலமாகச் செல்லலாம். டெல்லியில் இருந்து டேராடூனுக்கு (Dehradun) விமான வசதியும் உண்டு. ஹரித்வாரில் தங்குவதற்கு நல்ல தர்மசாலைகள் மற்றும் நவீன ஹோட்டல்களும் உள்ளன. கும்பத்திருவிழா காலங்களில் ஹரித்வாரில் பக்தர்கள் கூட்டம் அதிகம் காணப்படும். ஆகவே இந்த சமயங்களில் நாம் டெல்லியில் இருந்து டேராடுன் வழியாக ரிஷிகேஷ் சென்று இமயமலை அடிவாரத்தில் கங்கை நதிக்கரையில் உள்ள ஹோட்டல்களில் தங்கலாம். புனித நீராடுவதற்கு நாம் சொகுசு வாகனம் மூலம் ஹரித்வார் (22 கி.மீ.) வந்து செல்லலாம். ஹரித்வார் மற்றும் ரிஷிகேஷில் உள்ள புனித தலங்களை தரிசனம் செய்ய நமக்கு குறைந்தபட்சம் நான்கு நாட்கள் வேண்டும். அவைபற்றிய விவரங்களை நாம் பின்வரும் தொடர்களில் காணலாம்.



செல்வராஜ், டெல்லி
www.tamilcartrip.com
WhatsApp: +91.986.816.5715


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 . 724 . 7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# இரண்டுவார...

01ஆம் பக்கத்தொடர்ச்சி



B.C. Premier John Horgan

நான்கு முறை நாடாளுமன்றத்தைக் கூட்ட வுள்ளது. அதற்கும் குறைந்த அளவு நாடாளு மன்ற உறுப்பினர்களே நாடாளு மன்றத்துக்குச் சமூகமளித்துப் பங்கு பற்றுவர். ஆனால் மிகுதி நாடாளுமன்ற உறுப்பினர் நாடாளுமன்ற அமர்வில் இணையம் மூலம் சபாநாயகரின் இரண்டு பக்கமும் வைக்கப்பட்டுள்ள இரண்டு பெரிய திரையினூடாகக் கலந்து கொள்வர்.

ஜூன் 17இல் நாடாளுமன்றத்திற்குக் கோடைகால விடுமுறை ஆரம்பமானாலும் மத்திய அரசு மேற்கூறிய முறையில் ஜூலை 08, ஜூலை 22, ஒகஸ்ற் 12 மற்றும் ஒகஸ்ற் 26இலுமாக நான்கு தரம் நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டுமென அப்பிரேரணை தெரிவிக்கிறது.

புதிய ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற அவைத் தலைவர் Peter Julian ஊடகங் களுக்குத் தெரிவிக்கையில் அரசின் இந்தப் பிரேரணைக்கு புதிய ஜனநாயகக் கட்சி ஆதரவளிக்கும் என்றார். இவ்வாறான ஒரு கலப்பு முறைமூலம் எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்ள வேண்டும் என்பதே புதிய ஜனநாயகக் கட்சியின் விருப்பமும் ஆகும் என்றார்.

புதிய ஜனநாயகக் கட்சி, மத்திய அரசு நாடு முழுவதும் தொழிலாளர்களுக்குச் சம்பளத்துடன் கூடிய சுகவீனகால விடு முறையை அமல்படுத்த முன்வந்தால் மட்டுமே தமது கட்சி லிபரல் அரசின் மே 25க்குப் பின்னர் நாடாளுமன்றம் கூடுவதற் கான புதிய பிரேரணையை ஆதரிக்கும் என நிபந்தனையை முன்னர் விதித்திருந்தது.

பழமைவாதக் கட்சி, மத்திய அரசின் மே 25க்குப் பின்னர் நாடாளுமன்றம் கூடுவதற் கான புதிய பிரேரணைக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. பழமைவாதக் கட்சி யின் தலைவர் Andrew Scheer "நாங்கள் 338 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமர்வுகளுக்கு சமூகமளிக்க வேண்டு மெனக் கேட்காவிட்டாலும் குறைந்தது 50 நாடாளுமன்ற உறுப்பினர்களாவது நாடாளு மன்ற அமர்வுகளில் நேரடியாகப் பங்கு பற்ற வேண்டுமென விரும்புகிறோம். இணையம் மூலம் அமர்வுகளில் பங்கு பற்றுவது நேரடியாகப் பங்குபற்றுவதுபோல் வராது. தற்போதைய லிபரல் அரசாங்கம் நாடாளுமன்ற அமர்வுகளைக் கூட்டுவதற் கான தங்களின் எந்த யோசனைகளையும் ஏற்பதற்குப் பிடிவாதமாக மறுத்து வருகிறது. அரசு நேர்மையான முறையில் எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை" என்று தெரிவித்தார்.

புளக் குவிபெக்குவாக் கட்சியும் மத்திய அரசின் மே 25இற்குப் பின்னர் நாடாளு ஆதரவு தெரிவிக்க நிபந்தனைகளை விதித்தது. அதன் நிபந்தனைகளில் மத்திய அரசு வணிக நிறுவனங்களுக்கு அவர்களின் மேலதிக செலவினங்களுக்கு



NDP House Leader Peter Julian

(fixed overhead) பண உதவி வழங்க வேண்டும் என்றும், முதியோருக்கு மேலதிக பண உதவி வழங்க வேண்டுமெனவும் கேட்டிருந்தது. சிறுபான்மை மத்திய அரசு தனது மே 25க்குப் பின்னர் நாடாளுமன்றம் கூடுவதற் கான பிரேரணைக்கு நாடாளுமன்றத்தில் ஆதரவு பெற கட்டாயம் மூன்று எதிர் கட்சிகளில் ஒன்றின் ஆதரவைப் பெற வேண்டிய நிலையில் இருந்தது.

பத்து நாட்கள் சம்பளத்துடன் கூடிய சுகவீனகால விடுமுறை தொழிலாளர் களுக்கு வழங்க வேண்டுமென மாகாண மற்றும் பிரதேச அரசுகளிடம் வலியுறுத்துவ தாக மத்திய அரசு தெரிவித்ததன் மூலம் அதன் மே 25க்குப் பின்னர் நாடாளுமன்றம் கூடுவதற்கான பிரேரணைக்கு புதிய ஜனநாயகக் கட்சியின் ஆதரவை தற்போது பெற்றுள்ளது.

# அப்பா அம்மா பாதங்களில்

நீதி நேர்மை கருணையைப் புகட்டிவிட்டவர்
என்னை உலகுக்கு ஈன்ற என் அன்னை

பொறுமை மன்னிப்பு பணிவு உழைப்பைக்
கற்றுத்தந்தவர் பலசாலியான என் தந்தை

இருவரும் சேர்ந்து இயன்றளவு
கொடைப்பண்பு விதையையும்
என் சிந்தனைத் தோட்டத்தில்
உரமிட்டு விதைத்துச் சென்றுவிட்டனர்

இவற்றைவிடவும் வேறு என்ன
பெரிய சொத்து வேண்டும் எனக்கு
இவ்வுலகில்?

எனது எழுதுகோலில் தினமும்
ஊறிக்கொண்டிருக்கும்
'மை'
அவர்கள் இருவரின் வற்றாத
வியர்வை ஊற்று என்பதுதான் யதார்த்தம்

அதன் விளைச்சல்
இந்தப் பிரபஞ்சத்தின் வாழ்வுக்காக
நான் கொடுக்கும் உழைப்பு
எனும் கருத்து இதயத்திலிருந்து



உலக பெற்றோர் தினம் ஜூன் 01, 2020



முத்துராஜா

# வெய்யோனே நீ வாராய்!

பட்டதுன்பம் போதுமே பற்றும் குளிராலே
இட்டமுடன் வாழ முடியவில்லை _ சட்டென்று
வந்த கொரோனாவும் வாழ்வியலை மாற்றுவதால்
சிந்தை கலக்கமே சீர்.



கொடுமை குளிரால் கொரோனாவும் தந்த
வடுவால் அமைதி குலையத் _ தடுமாற்றம்
மக்கள் மதிமயக்கம் மாற்றுக் கருத்தில்லை
சிக்கல் அறுக்கும் அரசு.

காண்டற் கரிய கொரோனாக் கிருமியால்
தீண்டத் தகாத செயற்பாடும் _ ஆண்டாண்டாய்
கொண்டாடி வந்த கலாச்சாரம் கைவிட்டே
கண்டோம் புதுமுறைகள் காண்.

பாரே அதிசயிக்க பாசமுடன் வாழ்ந்தவர்கள்
பாரைவிட்டுச் சென்றதுவும் பார்த்திருந்தோம் _ போரில்
இறப்பவர்கள் பொல்லாக் கொரோனாவாம் நோயால்
இறப்போர் தொகையதிகந் தான்.

தனித்திருந்தே தன்னையே காத்தல் கடமை
மனநிறை வோடுசெய்தால் மாட்சி _ இனவழிப்பு
அற்றிடுமே நன்கறிந்த ஆட்சியரும் ஏற்றவாறு
நற்புத்தி சொல்கிறார் நன்கு.

காலத்தின் மாற்றம் கருணைமிகு சூரியனார்
சீலச் சிறப்புடனே செய்பணிக்காய் _ காலையிலே
ஈசானம் நோக்கியே ஈர்ப்பாய் உதித்தெமக்கு
ஆசானாய்த் தோன்றுகிறார் ஆம்.

ஆற்றொணாத் துன்பம் அகலவில்லை யென்றாலும்
தூற்றுவார் தூற்றுவ ரென்றாலும் _ காற்றுவாங்க
மூத்தோர்க ளெல்ல முறையறியாப் பிள்ளைகளே
கூத்தடிக்க நட்புநாடும் குர்ப்பு.

ஆதவனைக் கண்ட அனைத்தும் அகமகிழ்ந்தே
சாதனை செய்வதற்குச் சாத்தியமென் றெண்ணியே
தத்தம் கடமைசெய்யத் தற்றுணிபு கொண்டவராய்
சித்தமுடன் செய்கின்றார் தேர்.

சூர்ய ஒளிபடவே சூழல் ஒளியேற
ஆர்ப்பரிப்பும் மக்களிடை ஆனந்தமே _ கார்மேகம்
கண்சிமிட்ட காலந்தவறா மும்மாரி பெய்தெமக்கு
உண்ண உணவளிக்கும் ஊர்ப்பு.

ஐம்பூத அங்கமாம் ஆற்றலுள்ள ஆதவன்
தம்கடமை செய்திலனேல் தாங்கிடுமா இவ்வுலகு
வான்பொய்க்கும் ஏருளரார் ஏற்ற உணவின்றி
ஈனமாகும் வாவென்றும் ஏற்பு.

வெய்யோனே நீவாராய் வேதனையைப் போக்கற்காய்
தெய்வந்தான் நீயானால் தேவனே _ தொய்வில்லா
வாழ்வுக்குத் தேவையான வாய்ப்புக்கள் தாராயோ
தோழன்நீ என்பதனைத் தேர்.

முருகேசு மயில்வாகனன்








# Zoom வாழ்க்கை முறை

Covid-19 இன் பாதிப்பு உலக மக்கள் வாழ்வில் பல மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளது. முக்கியமாக எமது வாழ்க்கை முறை, தொழில் புரியும்முறை, உணவகங் களுக்கு சென்று சாப்பிடும் முறை... இவ்வாறு சிலவற்றைக் கூறலாம். பொதுவாக உலக நாடுகளில், அதன் முக்கிய நகரங்களிலேயே அநேகமான தொழில்கள் குவிந்து கிடக்கின்றன. நகரங்கள் என்ற காரணத்தால், தொழில் கள் நடத்துவதற்காக அதிக பணத்தைச் செலவு செய்ய வேண்டியுள்ளது. தொழிலாளர்கள் பணத்தையும், நேரத்தை யும் செலவு செய்து குறைந்தது ஐந்து நாட்கள் தொழில் புரிவதற்காக வந்து செல்ல வேண்டியுள்ளது. கோவிட்-19 ஏற்படுத்திய புதிய மாற்றத்தினால் இதுவே வழமையாகக் கூடிய சந்தர்ப்பங்களே அதிகம்.

ஏற்கனவே பலர் தமது மனைகளிலிருந்தே வேலை புரிவதைக் காணலாம். வளர்ந்த நாடுகளில் இந்த மாற்றம் அதிகமாக உள்ளது.

கனடாவில் குறிப்பாக, வன்கூவரிலே புதிய மாற்றங்கள் முதலில் ஏற்படும். பிற்பாடு அந்த மாற்றங்கள் அல்லது நிகழ்வுகள் சிறிது சிறிதாக ரொறொன்ரோ, ஒட்டாவா என மற்றய நகரங்களுக்கும் நடை முறைக்கு வருவதனை எனது அனுபவத்தில் கண்டுள்ளேன்.

கடந்த மூன்று மாதகால வாழ்க்கை, வீட்டில் இருந்து தொழில் புரிபவர்களின் கருத்தின்படி தாங்கள் வீட்டிலிருந்து அதிகமாக வேலை செய்வதாகவும் மேலும் குறிப்பிட்ட கெடு கொடுக்கப்பட்ட



காலத்திற்கு முன்பாகவே தமது குறிக் கோள்களை எட்டுவதாகவும் தெரியப் படுத்துகின்றனர். அத்துடன் அலுவலகத் திற்குச் சென்றுவரும் நேரம், போய் வருவதற்கான செலவு, உணவுச் செலவு, உடைகளின் செலவு போன்றவற்றில் மிச்சம் இருப்பதாகவும் தெரியப்படுத்து கின்றனர். அனேகமான அலுவலகத் தொழில்கள் வீட்டிலிருந்தே செய்யக் கூடியதாகக் கூறுகின்றனர். இதனால் எதிர்காலத்தில் ஐந்து (5) நாள் தொழில் முறை மூன்று அல்லது நாலு நாட்களுக்குள் அடங்கலாம் என எதிர்பார்க்கலாம்.

பாடசாலைகள், பல்கலைக்கழகங்களும் தமது கற்பித்தலை Zoom முறை, Google Meet அல்லது வேறு முறையில் கொண்டு வரலாம். இங்கிலாந்தில் இருக்கும் ஒரு பல்கலைக்கழகம் கற்பித்தலை Zoom முறைக்குக் கொண்டுவர இருப்பதாகவும், பரீட்சை முறையையும் on line மூலம் கொண்டுவர இருப்பதாகவும் தெரியப்படுத்தியுள்ளது.

ஏற்கனவே நிதி நிறுவனங்கள் அலுவலகத் தைத் திறந்திருக்கும் நேரத்தைக் குறைத்துள்ளன. பணம் கையாளும் நிலைமையும் கட்டுப்பாட்டுக்குள் வரலாம். ஆதனங்களின் அமைப்பு முறைகளும் மாறலாம். வீட்டிலிருந்தே தொழில் புரிவதற் கேற்ப அமைப்புகள் மாறலாம். நகரத்தை விட்டு வெளியே அகலமான விஷ்தீரண மான வீட்டில் மக்கள் வாழ விரும்புவர். விலையும் குறைவாக இருக்கும். நகரத்தை நோக்கி வந்த காலம் மாறி நகரத்தை விட்டு வெளியே மக்கள் செல்லும் காலம் வரப்போகிறது.

புதிதாக நிர்மாணிக்க இருக்கும் வீடு / மனைகளில் மாற்றங்கள் ஏற்படும். புதிய விதமான அமைப்புகளும் தோன்றலாம்.

வெளிநாடுகளில் இருந்து பிரசித்தமான பல்கலைக்கழகங்களுக்கு இடம்பெயர்ந்து, மிகப்பெரிய பணச்செலவில் படித்த மாணவர்கள் எதிர்காலத்தில் தமது வீட்டில் இருந்தே தமது மேற்படிப்பைப் படிக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளது. ஏற்கனவே பல பல்கலைக்கழகங்கள் தமது பட்டமளிப்பு விழாவை Zoom மூலம் நடத்தியுள்ளனர்.

பல நாடுகள், புலம்பெயர்ந்து கல்வி கற்கும் மாணவர்களினால் வரும் வருமானத்தில் பெரிய இழப்பை எதிர் பார்க்கலாம். மாணவர்கள் புலம்பெயர்ந்து கல்வி கற்பதால், குடியேறும் நாடுகளுக்கு மாணவர்களின் பலவிதமான வருமானங்களினால் ஏற்படும் இந்த இழப்பினால் ஆதனத்தின் முதலீடும் குறையக்கூடிய சந்தர்ப்பங்களே உள்ளன.

மாற்றங்கள் எப்பொழுதும் இருந்து கொண்டே இருக்கும். கோவிட்-19இனால் ஏற்படும் மாற்றம், 1983/84, 1989/90, 911(2001), 2008/2009 போன்றதல்லாமல் முற்றிலும் வேறுபட்டது. 1918/1919இல்



ஏற்பட்ட ஸ்பனிஸ் வைரஸ் போன்றதாகக் காணப்படுகின்றது. இதன் வீரியம் மற்றும் மாற்றங்கள் காலத்துடனே அறிய வேண்டியுள்ளது. மாற்றத்தை சரியாகப் பாவிப்போர் பலனும் நலனும் பெறுவர். ஒவ்வொரு மாற்றத்திலும் நன்மைகள் மறைந்தே இருக்கும். அதனை தகுந்த முறையில் இனங்கண்டு தமக்கு சார்பாகப் பாவிப்போர் வெற்றியாளர்களாக மாறுகின்றனர்.

– சத்தியன்

# நாமும் நமது இல்லமும் 559

## கோவிட்-19இன் ஆதனம் மீதான தாக்கம்


ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கோவிட்-19 என்பது வாழ்வில் ஒரு புதுப் பாடத்தைப் படிப்பித்துள்ளது. உலகையே மாற்றியுள்ளது. ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஸ்பானிஸ் காய்ச்சல் (Spanish flu) 1918 வசந்த காலம் தொடக்கம் 1919 கோடை காலம் வரை உலக மக்களில் 500 மில்லியன் மக்களை பாதித்தது. இந்த எண்ணிக்கை அந்த நேரத்தில் உலக மக்கள் தொகையில் ஆறில் ஒரு பங்கு. இறப்பு எண்ணிக்கை 50 மில்லியனுக்கும் அதிகமாக இருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான வைரசின் ஆதிக்க நிலை 2019/2020இல் மீண்டும் ஏற்பட்டுள்ளது. 100 வருடங்களுக்கு மேலாக உலகில் வாழ்வோர்தான் தமது அன்றைய அனுபவத்தை இன்று கூற முடியும்.

கனேடிய ஆதன் வியாபாரத்தில் 2020 ஏப்ரல் மாதம் முழுவதும் வியாபாரம் தடைப்பட்டதாகக் கொள்ளலாம். இந்த மாதத்தை 2019 ஏப்ரல் உடன் ஒப்பிடும்போது ஆதன வியாபாரத்திலும் விலையிலும் 58% இறக்கம் ஏற்பட்டதைக் காணக்கூடியதாக உள்ளது. கனடாவின் முக்கிய 26 நகரங்களைக் கணக்கிடும்போது, 25 நகரங்களில் இந்த நிலைமையைக் காணலாம். அத்துடன் சந்தைப் படுத்தலும் இக்காலப் பகுதியில் 2019ஆம் ஆண்டைவிடக் 50% குறைந்துள்ளது.


Tiff Macklem

இப்பொழுது உள்ள கேள்வி, மக்கள் இன்றைய உள்ளடங்கிய முடங்கல் நிலையிலிருந்து (lock down) வெளியே வரும்போது எவ்வளவு நிலைமாற்றம் ஆதன வியாபாரத்தில் ஏற்படும். இதைப் பற்றிய தகவல்களோ முக்கியமான எதிர்வு கூறல்களோ இலகுவாகக் கூறமுடியாமல் உள்ளது. மத்திய அரசின் நிலைப்பாடுகளால் எதிர்வரும் மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குப் பெரிய மாற்றங்களைக் காண முடியாது. எனினும் வியாபார முதலீட்டிற்காக வைத்திருக்கும் ஆதனங்களை முதலில் சந்தைப்படுத்தப் படலாம். எவ்வளவு மக்களின் தொழில்கள் இழக்கப்பட்டுள்ளன என்பதைக் கொண்டே முடிவுகள் தெரியவரும்.

### பின்வரும் நிலைமைகளையும் சீர்தூக்கிப் (ஆராய்ந்து) பார்க்கலாம்:

**வட்டி வீதம்:** கனேடிய மத்திய வங்கியின் வட்டி வீதம் இப்போது 0.25%ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. ஜூன் 2020இல் இருந்து கனேடிய மத்திய வங்கியின் புதிய ஆளுனராக Tiff Macklem பதவியேற்க இருக்கிறார். இவர் 2008/2009இல் ஏற்பட்ட பொருளாதார நிலைமையை இலகுவாகக் கையாண்ட முன்னாள் கனேடிய மத்திய வங்கியின் ஆளுனர் Mark Carney (2008-2013)யுடன் தொழில்புரிந்த அனுபவம் உடையவர். தற்பொழுது 5 வருட மாறாத வீட்டு அடமான (5 yeras fixed mortgage interest rate) வட்டிவீதம் 2.4%இல் இருந்து 2.6%வரை காணப்படுகிறது. ஆனால் 2022 வரை மத்திய வங்கியின் வட்டி வீதத்தில் மாற்றமிருக்காது எனப் பலரும் எதிர்பார்க்கின்றனர்.

### தொழிலாளர்களின் நிலைமை:

நிரந்தரமாகத் தொழிலை இழந்தோரின் எண்ணிக்கை மற்றும் இதில் அடிப்படை வருமானம் உள்ளவர்களில் எத்தனைபேர் தொழிலை இழந்தனர் போன்ற விபரங்களை இவர் களுக்குக் கனேடிய அரசின் அவசரகால நிதியுதவி கிடைக்கும்வரை கணக்கெடுக்க முடியாது. இதுவரை அதிக சம்பளம் பெறுவோரின் நிலைமையானது அடிப்படை அல்லது மத்திய வருமானங்கள் உள்ளோ ருடன் ஒப்பிடும்போது ஓரளவு பாதுகாப் பாக உள்ளது. உண்மை நிலையை இப்போது கண்டுபிடிக்க முடியாமல் உள்ளது. தொழில்புரியாத காரணத்தினால் 768,000 அடமானக் கடன்களின் கொடுப்பனவு பிற்போடப்பட்டுள்ளது.

**கனேடியப் புதிய குடிவரவாளர்கள்- New immigrants:** 2019இல் 488,000பேர் கனடா வுக்குப் புதிய குடிவரவாளர்களாக வந்துள்ளனர். ரொறொன்ரோவில் வாழ்வோரில் 51வீதமானோர் கனடாவுக்கு வெளியே பிறந்தவர்கள். பல நாடுகளில் இருந்தும் கனடாவுக்கு வருவதற்காக விசா கிடைத்தோரும் தற்பொழுது வரமுடியாமல் உள்ளது. இந்நிலை எவ்வாறு நீங்கும் என்பது குறுகிய காலத்திற்கு தெரிய வரலாம்.

**நகரம்/நகரத்தின் வெளியே / பின்தங்கிய பகுதி:** வீட்டிலிருந்தே தொழில் புரியலாம் என்ற புதிய முறைக்கு மக்கள் பழக்கப்பட்டிருப்பதால் எதிர் காலத்தில் நகரத்தில்தான் வாழ வேண்டும் என்ற நிலைமை மாறலாம். எனவே நகரத்தின் வெளியே (rural) பகுதியில் பெரியளவில் நிலத்துடன் கூடிய வீடுகள் குறைந்த விலையில் வாங்கக் கூடியதாக இருப்பதால் மக்கள் இடம் பெறக்கூடிய அதிக சந்தர்ப்பம் அதிகமாகலாம். இதனால் நகரின் வாடகையில் மாற்றம் ஏற்படலாம்.

### புதிய வீடு/மனைகளின் நிலைப்பாடு:

ஒன்ராறியோவில் கட்டுமானப் பணிகள் ஓரளவு நிறுத்தப்பட்டதாகக் கொள்ளலாம். இதனால் இவ்வருடத்தில் கட்டி முடிக்கப் படவேண்டிய அனைத்துத் திட்டங்களும் பின்போடப்பட்டுள்ளன. கடந்த வருடம் கட்டுமானப்பணி தொடங்கிய 209,000 வீடு / மனைகள் தற்போதைய நிலைமையில் 185,000ஆகக் குறையலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது. இந்நிலைமை எவ்வாறு இருக்குமென்று உடனடியாகக் கூறமுடியாது.


Spanish Flu 1918

### சந்தைப்படுத்தும் வீடு மனைகள்:

கனடாவில் ஆதன வியாபாரம் முற்றாக நிறுத்தப்பட்டதாகக் கொள்ளலாம். ஆதன வியாபாரம் கனேடிய மொத்தப் பொருளாதாரத்தில் 20%ஐ கொண்டுள்ளது. இதற்கு அடுத்ததாக வாகனத் தொழில் (auto industry) 16.8 %ஆக உள்ளது. ஆதன வியாபாரம் கனேடியப் பொருளாதாரத்திற்கு முக்கியமானது. இவ்வாறிருக்கையில் கனேடிய அரசு எப்போதும் ஆதன வியாபாரத்தை மிகக் கவனமாகவே கையாளும்.

2020 ஆரம்பிக்கும்போதுள்ள நிலமை கடந்த 5 மாதங்களில் முற்றாக மாறியுள்ளது. 100 வயதுக்கு மேல் வாழ்வோர் தங்கள் அனுபவத்தை கூறக்கூடிய நிலையில் இல்லை. புதிய அத்தியாயங்கள் எழுதப்படுகின்றன. இந்த நிலைமை எவ்வாறு இருக்கும் என்பதை எதிர்காலம் தான் சொல்லும். எனினும் மாற்றங்கள் எப்போதும் இருந்துகொண்டே இருக்கும். இவ்வாறான சந்தர்ப்பங்களைத் தகுந்த முறையில் பாவிப்போர் முற்பாய்ச்சல் எடுப்பர் என்பதே உண்மை. பள்ளத்திற்குப் பின்பு மேடே வரும். இதுவே பாடம்.

மூன்று அடுக்கு அரசுகளும் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த நிச்சயம் தம்மாலான முயற்சிகளைக் கையில் எடுக்கும் என்பது வெளிப்படை. ஆனால் அவை எவ்வாறு இருக்கும் என்பதைக் கூற முடியாமல் அரசுகள் உள்ளன. வட்டி வீதத்தில் பெரிய மாற்றங்கள் ஏற்படுத்த முடியாத நிலைமையில் மிகவும் குறைவாக உள்ளது. அரசுகள் நிச்சயம் புதிய முறைகளைக் கண்டுபிடிக்கும்.



# தமிழ்த் தேசிய அரசியலின் எதிர்காலம்?




இலங்கை கொரோனாவைக் கடந்து இயல்பு நிலையை தோற்றுவிப்பதற்கான நகர்வுகளை வேகமாக்கி வருகின்றது. இதனை, நாடாளுமன்றத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கான நகர்வு என்று கூறுவதும் பொருத்தமானதே.

நாடு தற்போது பொதுத் தேர்தல் ஒன்றிற்குச் செல்வது அவசியமானதுதான். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு நீண்ட நாட்களாகும் நிலையில் அது அத்தியா வசியமாகின்றது. தேர்தல் ஒன்றை நடத்து வதாக இருந்தால் நாட்டை முடங்கிய நிலையில் வைத்துக்கொண்டு அதனைச் செய்ய முடியாது. எனவே, இயல்பு நிலையை ஏற்படுத்தி விட்டுத் தேர்தலை நடத்தவதே சரியானது. ஆனால், ஏற்கனவே அறிவித்த யூன் மாதம் 20ஆம் திகதியில் தேர்தலை நடத்துவது சாத்திய மாகுமா என்கின்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது. யூன் மாதம் 20ஆம் திகதி தேர்தலை நடத்தவதற்கு எதிராக உயர் நீதிமன்றில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற் கான திகதி குறிப்பிடப்பட்டு வெளியிடப் பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யுமாறு கோரியே மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த மனுக்கள் நீதியரசர்களைக் கொண்ட குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது. இன்னும் ஒரு முடிவிற்கு வர முடியாத நிலையில் நாட்கள் கடந்து செல்கின்றன. இந்த நிலையில் தேர்தலுக் கான வாக்குச் சீட்டுக்களை அச்சிடும் பணியை ஆரம்பிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு தேசிய அச்சக கூட்டுத் தாபனத்திற்கு உத்தரவிட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. எவ்வாறாயி னும் உயர்நீதிமன்றம் வழங்கும் தீரப்பினை அடுத்தே அச்சிடும் பணிகள் ஆரம்ப மாகும். இதனால், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினையே அனைத்து தரப்பினரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ராஜபக்ஸவினருக்கான வெற்றிவாய்ப்பே அதிகமாகவுள்ளது. கொரோனா அந்த வாய்ப்பை மேலும் அதிகரித்துக் கொடுத் துள்ளது என்றே கூறலாம். அடுத்ததாக-பிரதான எதிர்த் தரப்பிலுள்ள சஜித் பிரேமதாச அணியினருக்கும், ரணில் விக்ரமசிங்க அணியினருக்குமிடையிலான மோதல்நிலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதும் ராஜபக்ஸ தரப்பினருக்கான வெற்றி வாய்ப்பை உறுதிப்படுத்தி வருகின்றது. இவை இவ்வாறிருக்க, இன்று தமிழ் அரசியலின் நிலை என்ன என்பதை பார்க்கும் போது எதனையும் எதிர்வுகூற முடியாத நிலையே காணப்படுகின்றது. தமிழத் தேசிய அரசியலில் ஒற்றுமை மோசமாக சீர்குலைந்துள்ளது. தமிழ் மக்களின் வாக்குகள் பிரிந்து செல்லக் கூடிய நிலை ஏற்படும் என்பதை மட்டுமே எதிர்வுகூற முடிகின்றது.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு குறித்து கடந்த தேர்தல்களில் வாக்குறுதிகளை அள்ளி வீசிவந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு நடைபெறவுள்ள தேர்தலில் என்ன வாக்குறுதியை தமிழ் மக்களிடம் வழங்கி வாக்குக் கேட்கப் போகின்றது?

அண்மையில் தமிழ் தேசியக் கூட்டமைப் பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஸவை சந்தித்துள்ளனர். கலைக்கப்பட்ட நாடாளு மன்றத்தில் உறுப்பினர்களாக இருந்தோரு டனான சந்திப்பு ஒன்றிற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ அழைப்பு விடுத்திருந் தார். அந்த அழைப்பை எதிர்க் கட்சிகள் நிராகரித்திருந்த நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அழைப்பை ஏற்றுக்கொண்டு சந்திப்பில் கலந்துகொண்டது.

குறித்த சந்திப்பின் பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஸவிற்குமிடையில் தனியானதொரு சந்திப்பும் இடம்பெற்றது. இந்த சந்திப்பில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, மேலும் விடுவிக்கப்படாமலுள்ள காணிகளை விடுவித்தல் ஆகிய விடயங்கள் தொடர்பில் கூட்டமைப்பினர் பிரதமரிடம் கலந்துரையாடினர். அதனை பிரதமர் செவிமடுத்திருக்கின்றார். ஆனால் ஏதாவது நடக்குமா என்பது யாருக்கும் தெரியாது.

புதிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் தொடரும் என்பதாகக் கூட்டமைப்பு கூறி வருகின்றது. இதுவே இப்போது கூட்ட மைப்பு இந்த தேர்தல் காலத்தில் தமிழ் மக்களுக்கு வழங்கியிருக்கும் வாக்குறுதி யாக அமைகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தில் முன்வைக்கப்பட்ட புதிய அரசியல் யாப்பு சீர்திருத்தம் தொடர்பிலும் புதிய அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடத்தப்போவதாகவும் கூட்டமைப்பினர் கூறுகின்றனர். யார் அரசாங்கத்தை அமைத்தாலும் அவர்களுடன் பேசித்தானாக வேண்டும் வேறு வழி யில்லை என்பதே தமிழ் தேசியக் கூட்ட மைப்பின் நிலைப்பாடாகவுள்ளது. அது சரிதான். ஆனால், வாக்களிக்கப்போகும் மக்களுக்கு உறுதியான வாக்குறுதிகள் எதனையும் வழங்கும் நிலையில் கூட்டமைப்பு இல்லை.



அதிகாரங்களை பகிர்ந்தளிக்கும் அரசியல் தீர்விற்கு இடமே இல்லை என வெளிப் படையாகத் தெரிவித்துள்ள தலைமையுடன் அரசியல் தீர்வு தொடர்பில் எதனைப் பேசுவது? தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைக்கு இணங்க, ஒரு நல்லெண்ண நடவடிக்கையாக தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கும் நட வடிக்கையினையாவது அரசாங்கம் மேற் கொண்டால் தமிழ் மக்களுக்கு சிறு துளி நம்பிக்கையாவது ஏற்படும். வெறும் வார்த்தைகளையும், வாக்குறுதிகளையும் கேட்டுக் கேட்டு களைப்படைந்த நிலை யிலேயே தமிழ் மக்கள் உள்ளனர்.

முன்னரெல்லாம் தேர்தல் காலங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பே வடக்கு கிழக்கில் அதிக ஆசனங்களை வெற்றிகொள்ளும் என முழக்கமிட்டு வந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இன்று மௌனமாகவே இருக்கின்றனர். 'நடைபெறவுள்ள தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு' என்கின்ற கருத்தை மட்டுமே கூட்ட மைப்பினர் தற்போது கூறி வருகின்றனர். "வெல்வோம்" என்று அடித்துக் கூறும் உற்சாகத்தில் அவர்கள் இல்லை.

ஏனைய தமிழ் தேசியம் சார்ந்த கட்சி களும் என்ன செய்வது என்பதை அறி யாத நிலையிலேயே உள்ளன. அவர் களின் அண்மைக்கால அரசியல் 'நினைவேந்தல்' அரசியலாகவே உள்ளது. தடைகளுக்கு மத்தியில் நினைவேந்தல் நிகழ்வு களை நடத்துவதும், அதனை ஒரு துணிச்சலான சாதனையாக வெளிக்காட்டு வதும்தான் நடைபெற்று வருகின்றது. இவற்றையெல்லாம் இப்போது தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளப் போகின்றார் களா? அல்லது எதிர்ப்பரசியல் செய்வதால் மக்கள் ஆதரவு கிடைத்துவிடுமா?

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரு மான எம்.ஏ.சுமந்திரன் அண்மையில் சிங்கள ஊடகம் ஒன்றிற்கு அளித்த செவ்வி சர்ச்சையை ஏற்படுத்தியது, கூட்டமைப்பிற்குள்ளேயே சுமந்திரனுக்கு எதிர்ப்பு கிளம்பியது. கூட்டமைப்பிற்கு எதிரான அணிகளைச் சேர்ந்தோர் தனி யாக சுமந்திரனை மட்டுமன்றி ஒட்டு மொத்தமாகக் கூட்டமைப்பினரையே தாக்கத் தொடங்கினர். இது தொடர்பில் சுமந்திரன் தன்னிலை விளக்கமளித்தார். இதனைத் தொடர்ந்து அந்த சர்ச்சை அமிழ்ந்து போய்விட்டது. சுமந்திரன் வழங்கிய விளக்கத்தின் பின்னர் சம்பந்தனும் அவரின் விளக்கத்தை சரியானது என்று கூறியிருந்தார். சம்பந்தன் சுமந்திரனை கட்சியிலிருந்து நீக்க வேண்டும் என்றெல் லாம் கூறியவர்கள் மௌனமாகி விட்டனர். இம்முறை தேர்தல் பிரச்சாரங்களின் போது தமிழ் தேசியக் கட்சிகள் மக்களுக்கு எந்த உறுதிப்பாட்டையும் வழங்க முடியாத நிலையிலேயே இருக்கின்றன. இவர்களின் உணர்ச்சி வசப்பட்ட உரைகளை செவிமடுக்க தமிழ் மக்களும் தயாராக இல்லை.

விடுதலைப்புலிகளின் தீவிர பற்றாளர்களாக வெளிக்காட்டிக் கொள்வதால் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளலாம் என்கின்ற தந்திரோபாயத்தைக் கடைப் பிடிக்கும் கட்சிகளின் எதிர்பார்ப்பு எதுவும் இம்முறை வெற்றியடையப்போவதில்லை. இந்த அரசியல் இனி வரிவராது என சில தினங்களுக்கு முன்னர் என்னிடம் உரையாடிய அரசியல் ஆய்வாளர் ஒருவர் கூறினார்.

கொரோனா தமிழ் பிரதேசங்களில் நேரடி பாதிப்பை ஏற்படுத்தாவிட்டாலும் பொருளா தார ரீதியான பாதிப்பை ஏற்படுத்தியுள் ளது. இதிலிருந்து எவ்வாறு மீளலாம் என்பதே சாதாரண அடிமட்ட மக்களில் இருந்து, நடுத்தர வர்க்கத்தினர், முதலாளிகள் என அனைவரதும் கவலை யாக உள்ளது. கொரோனா முகாமைத்து வம் காரணமாக தென்னிலங்கையில் ஆளும் தரப்பினருக்கு வாய்ப்பு நிலை அதிகரித்துள்ள நிலையில், தமிழ் அரசியல்வாதிகளுக்கு இக்காலகட்டம்

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்...)

World Class Realty Point Brokerage
Affordable Homes ♦ Pre-Construction Condos
Investment Properties
Search Here - Find Here
www.HOUSEPRICE.ca
Right Realtor Right Price
HousePrice.ca
Sam Surendran
Sales Representative
Dir: 647.350.0220
World Class Realty Point Brokerage
55 Lebovic Ave, #C115, Toronto, ON M1L 0H2. Tel: 416.444.7653

# முடக்க நிலையிலும் முடங்கி விடாத கல்வி!




அண்மைக் காலமாக உலகம் முழுவதையும் அச்சுறுத்திவரும் Covid-19 வைரஸின் தாக்கமானது பல்வேறுபட்ட பின்னடைவுகளை மக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்தி வருகிறது. இதுவரையில் உலகம் முழுவதும் பல லட்சத்திற்கு மேற்பட்டோர் தொற்றால் பாதிக்கப்பட்டும் மரணித்தும் உள்ளனர். இதனால் மக்கள் அனைவரும் வீடுகளில் முடங்கிய நிலையிலேயே உள்ளனர். தொழில்களில் ஈடுபடுவோர், மருத்துவ தேவையுடைய நோயாளிகள், முதியோர், போக்குவரத்துத் தடையால் சொந்த ஊருக்குத் திரும்ப முடியாதோர், பாடசாலைகள் மூடப்பட்டதால் கல்வியை இழக்கும் மாணவர்கள் என அனைத்துப் பிரிவினருமே இதனால் மிகுந்த பாதிப்பினை எதிர்கொள்கின்றனர்.

இவர்களின் நிலை இவ்வாறு இருக்கையில் Covid-19 தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கத் தம் நலனையும் கருத்தில் கொள்ளாது இரவு பகலாக உழைக்கும் வைத்தியர்கள், தாதியர்கள், சுகாதாரத் தொழிலாளர்கள், காவல்துறையினர், பாதுகாப்புப் பிரிவினர், அத்தியவசியப் பொருட்கள் விற்பனையாளர் போன்றோரின் சேவை மகத்துவம் வாய்ந்தது. இந்நிலையில் இந்த முடக்கநிலை காரணமாக உலகம் முழுவதிலும் 1.2 பில்லியன் மாணவர்கள் பாடசாலைக் கல்வியை இழக்கும்நிலை ஏற்பட்டுள்ளது. ஆளிடைத் தொடர்புகள் மூலமாக இந்நோய் பரவுவதால் மாணவர் ஆரோக்கியத்தைக் கருத்திற் கொண்டு பாடசாலைகளும் மூடப்பட்டதால் கல்வியில் ஒரு நீண்ட இடைவெளிக்காலமாக இக் காலப்பகுதி காணப்படுகிறது.

பாடசாலைகள் மூடப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்து விட்டன. இந்நிலையில் மாணவரின் கல்வியில் தடங்கல் ஏற்படாதிருக்கக் கையாளப்படும் e-learning முறையானது உலகம் முழுவதும் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. இத்தொலைக் கல்விமுறையில் இணையம் மூலமாக ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வீட்டில் இருந்தே கற்றுக்கொள்ளக் கூடியவாறு கற்பிக்கப்படுகிறது. இக்கல்விமுறைக்கு தொடர்பு சாதனம் மற்றும் இணைய வசதி என்பன இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. இந்நிலைக் கற்பித்தலை மேற்கொள்ளக்கூடிய செயலிகளைப் (apps) பயன்படுத்தி ஆசிரியர் கற்பிப்பவற்றை மாணவர்கள் சமகாலத்திலேயே கற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதுடன் சந்தேகங்களைக் கேட்டறிதல், விளக்கங்களைப் பெறுதல் போன்றவற்றுக்கு இக்கல்வி முறையானது சிறந்த வரப்பிரசாதமாக அமைகிறது. அனைத்து மாணவர்களாலும் இம்முறையை பயன்படுத்த முடியாமையானது ஒரு பிரதிகூலமாகும். காரணம் மாணவர்களின் குடும்பப் பொருளாதார நிலைமையே.

எல்லா மாணவர்களும் பொருளாதார நிலையில் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தோர் எனக் கூறிவிட முடியாது.




பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்தோர் தம் நாளாந்த தேவைகளையே பூர்த்தி செய்யத் திணறும் இவ் இக்கட்டான சூழ்நிலையில் தம் பிள்ளைகளுக்கு இணையம் மூலம் கல்வி வழங்குவது எம்மாத்திரம். இணையவழிக் கல்விக்கு கணினி அல்லது மடிக்கணினி குறந்த பட்சம் இணையத் தொடர்புள்ள கைத் தொலைபேசியேனும் அவசியமாகும். அதிலும் இணையப் பாவனைக்கான செலவினை ஈடுசெய்வது நாளாந்த வருமானக் கூலித் தொழிலாளிக்கு அதுவும் வேலைவாய்ப்பு ஏதுமற்ற இக்கட்டான நிலைமையில் சாத்தியமற்றதாகக் காணப்படுகிறது.

இச்சிரம காலத்திலும் உணவுத் தேவையை பூர்த்தி செய்வதற்கு சமூக நிறுவனங்களால் வழங்கப்படும் உதவிக் கடன் பணத்தில் தம் பிள்ளைகளின் கல்வி தடைபடக்கூடாது என நவீன தொலைபேசியைக் கொள்வனவு செய்த ஏழைப் பெற்றோரை நினைக்கும்போது கண்ணீரைத் தவிர்க்க இயலவில்லை. இவ்வாறு இணையத் தொடர்புள்ள கைத்தொலைபேசி இருப்பினும் ஆசிரியர்கள் கற்பிப்பதை பூரணமாக உள்வாங்கிக் கொள்வதற்குப் போதியதாக அமைந்து விடுவதில்லை

இலங்கையின் 2018ஆம் ஆண்டு நிலவரப்படி பாடசாலைப் பருவ மாணவர்களைக் கொண்ட குடும்பங்களில் 40%ஆனவையே இணைய வசதிகளை கொண்டுள்ளன. அதிலும் 90%ஆனவை கைத்தொலைபேசி மூலமான இணைய இணைப்புகளே. இந்நிலையில் அனைத்து மாணவர்களுக்கும் இணையவழிக் கல்வியை எடுத்துச் செல்வது சாத்தியமற்றதாக அமைகின்றது.

பல பாடசாலைகளும் மாணவர்களுக்கான இணையவழிக் கல்வியை ஆரம்பித்து விட்டன. இலங்கையில் பெரும்பகுதி மாணவர்களுக்கு தொலைக்கல்வி என்பது தற்காலத்திலேயே அறிமுகமாகியுள்ளது. இது எதிர்காலத்தில் வினைத்திறன் மிக்கதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இது இவ்வாறிருக்க, தற்போது பாடசாலைகளினால் முன்னெடுக்கப்படும் கற்பித்தலில் பெரும்பாலானவை whatsapp, viber போன்ற செயலிகள் மூலமே முன்னெடுக்கப்படுகின்றன. இதன் மூலமாக மாணவர்களுக்குப் பாடக் குறிப்புகளை அனுப்பக் கூடியதாக இருப்பதுடன் பயிற்சி வினாக்களை அனுப்பி மாணவர்கள் விடை எழுதியதும் ஆசிரியர்கள் சரிபார்க்கக் கூடியதாக இருப்பினும் இம்முறை பூரண திருப்தியானதாக அமைந்து விடாது. காரணம் கணிதம், பௌதிகவியல், போன்ற பாடங்கள் ஆசிரியரின் செயன்முறை ரீதியான விளக்கம் இல்லாமல் வெறும் பாடக் குறிப்புகளை மாத்திரம் பயன்படுத்திக் கற்றுக்கொள்ளக் கூடியதல்ல. மேலும் பாடக் குறிப்புகளை தொடர்ச்சியாக மாணவர்களுக்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கும் போது அதில் பெரும்பாலானவை மாணவர்களால் பயன்படுத்தப்படாமலேயே இருக்கும் சாத்தியமும் உள்ளது.

தற்காலத்தில் மாணவர்களுக்குக் கற்பிப்பதில் சிறந்த முறையாக அமைவது நிகழ்நேரக் காணொளி மூலமாகக் கற்பித்தலேயாகும். வகுப்பறை அளவிற்கு இல்லாவிடினும் கற்பிப்பதை மாணவர்கள் பூரணமாக உள்வாங்கக் கூடிய கற்றல் முறையாக இது காணப்படுகிறது. இதன் மூலமாக ஆசிரியரிடம் நேரடியாகவே பாடம் சார்ந்த சந்தேகங்களைக் கேட்க முடிவதுடன் மாணவர்கள் பாடங்களை அவதானிக்கின்றனரா என்பதை ஆசிரியர் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

ஆயினும் முன்னரே கூறியபடி இவ் அனுகூலங்களை மிகக் குறைந்த தொகை மாணவர்களாலேயே அனுபவிக்கக் கூடியதாக உள்ளது என்பது சிறு நெருடலான விடயம். சர்வதேச ரீதியான இம்முடக்க நிலையில் பெரும்பாலான மாணவர்கள் இணையவழிக்கல்வி என்பதை ஒருநாளும் அனுபவிக்காதவர்களாகவே உள்ளனர். இதற்கு இணையவழிக் கல்விக்கான வசதியின்மை ஒருபுறமிருக்க வசதி வாய்ப்புகள் இருந்தும் கல்வியை அலட்சியம் செய்யும் மாணவரும் இருக்கத்தான் செய்கின்றனர்.

இலங்கையில் இணையசேவை நிறுவனங்கள் காலத்தின் தேவை கருதி இணைய பாவனைக்கான பல சலுகைகளையும் வழங்கி வரும் இக்காலத்தில் மாணவர்கள் அவற்றை சரியாகப் பயன்படுத்தி தம் கல்வியை மேம்படுத்துகின்றனர் என்பது மறுப்பதற்கில்லை. ஆனால் பல மாணவர்கள் இச்சலுகைகளைக் கல்விக்காகப் பயன்படுத்தாது சமூக வலைத்தளங்களிலும் தேவையற்ற பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளிலும் காலத்தை விரயம் செய்வது வேதனையளிக்கிறது. கல்வியே எதிர்கால வாழ்வின் மூலதனம். காலத்தை வீண் விரயம் செய்யும் இவையெல்லாம் தற்காலிகமானதே.

கல்விக்கான வசதி வாய்ப்புகள் இருந்தும் அவற்றை உதாசீனம் செய்யும் மாணவர்களே, அடிப்படையான வசதிகள் இல்லாமலும்கூட கற்கைக்கான வேட்கையுடன் பல மாணவர்களும் விடாமுயற்சியுடன் கற்கின்றனர். ஆகவே எம் வளங்களை சரியாகப் பயன்படுத்த வேண்டியது எம் கடமையல்லவா?

இன்று உலகம் முழுவதிலும் ஒரு அசாதாரண கடின நிலைமை காணப்படுகிறது. ஆகவே மாணவர்கள் தாமாகவே உணர்ந்து கல்வியல் ஈடுபடவேண்டும். நவீன முறையிலான கற்றலில் ஈடுபடும் வசதியற்றவராக உங்கள் நண்பர்கள் கூட இருக்கலாம். ஆகவே ஒரே வகுப்பு மாணவர்கள் அவர்களுடன் உங்களையும் தொலைக்கல்வி முறையில் ஈடுபட உதவுவதன் மூலம் அவர்களது எதிர் காலத்திற்கும் ஒரு சிறு உதவியைச் செய்த நிறைவு உங்களைச் சாரும்.

மேலும் இக்காலத்தில் தொலைக்காட்சிகள், வானொலி அலைவரிசை மூலமாகவும் பாடசாலை மாணவர்களுக்கான கல்வி நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஆகவே அனைத்து வளங்களையும் சரியாகப் பயன்படுத்திக் கொள்வதென்பது மாணவரின் கைகளிலேயே உள்ளது. கவனக் கலைப்பான்களான: சமூக வலைத்தளங்கள், தொலைக்காட்சி, வீண் குழு அரட்டைகளில் நேரத்தை வீண்விரயம் செய்யாது எம் சூழலின் தற்போதைய நிலைமையைக் கருத்திற் கொண்டு வீடுகளில் பாதுகாப்பாக இருந்தவாறே கற்றலில் கண்ணும் கருத்துமாக ஈடுபடுவோமாக.

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# வடமாகாணக் கல்வி நிலையை மேம்படுத்துவதற்கான சில பின்னணிகளும் ஆலோசனைகளும்!

ந. அனந்தராஜ், B.A.(Hons.) - M.A
Dip-In-Edu.,Dip-In-Journalism, SLPS, SLEAS

அண்மைக் காலமாக இலங்கையின் கல்வி வரலாற்றில் பேசு பொருளாகவும், விமர்சனத்திற்குரியதாக இருந்து வருவதுமாக இருப்பது வடக்கு மாகாணத்தின் தற்போதைய கல்வி நிலை. அண்மையில் வெளிவந்த க.பொ.த. சாதாரண தர கல்விப் பொதுத்தராதரப் பரீட்சை முடிவுகள் வட மாகாணக் கல்வியியலாளர்களிடையே மட்டுமல்லாது, ஊடகங்களினாலும், கல்வி நடைமுறைகளைப் பற்றித் தெரிந்து கொள்ளாதவர்களாலும், அரசியல்வாதிகளாலும் பல்வேறு வகையிலான விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக ஒரு சிலரால் கல்வி அமைச்சும், மாகாணக் கல்வித் திணைக்களமும், வலயங்களும் சரியாகத் தமது கடமைகளை ஆற்றவில்லை என்ற குறைபாடு முன்வைக்கப்படுகின்றது.

இன்னும் ஒரு சாராரால் எல்லா வளங்களும் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட போதும். அதிபர்களும், ஆசிரியர்களும் அர்ப்பணிப்புடன் கடமைகளை ஆற்றவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இன்னும் சிலரால் எல்லாம் சரியாக இருந்தும் பெற்றோர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படாததால், அவர்கள் தமது பிள்ளைகளின் கல்வியில் அக்கறை காட்டுவதில்லை என்றும், சிலர் மாணவர்கள் அதிகளவில் தொலைக்காட்சிகளைப் பார்வையிடுவதிலும், செல்லிடத் தொலைபேசிகள் அல்லது ஸ்மாட் போன்களைப் பார்வையிடுவதிலும், தொலைக்காட்சி விளையாட்டுக்களில் ஈடுபடுவதனாலும், கல்வியின் மீதான நாட்டம் குறைந்து வருவதாகவும் கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

சில கல்வியாளர்கள் பாடசாலைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளைச் சுதந்திரமாக முன்னெடுப்பதற்குத் தனியார் கல்வி நிலையங்களின் அதிகரித்த செயற்பாடுகள் தடையாக இருப்பதாகவும், இருவெவ்வேறு நிலைப்படுத்தப்பட்ட கற்பித்தல் செயற்பாடுகளினால் மாணவர்களிடையே மனக் குழப்பங்கள் ஏற்படுவதால், கல்வியில் முழுமையான ஈடுபாட்டைக் காட்ட முடியாது போவதாகவும் குறிப்பிடுகின்றனர். சில ஆசிரியர்களும், அதிபர்களும் பெண் மாணவிகள் மீது தகாத முறையில் நடந்துகொள்வதால் மாணவிகள் பாடசாலைகளுக்கு வருவதற்கு அச்சப்படுவதாக சமூகவியலாளர்களும், மனித உரிமை அமைப்புக்களை சேர்ந்தவர்களும் குற்றம் சாட்டுகின்றனர்.



அதேவேளை தமிழ் பிரதேசங்களை அரசாங்கம் பாரபட்சமாக நடத்துவதால் கல்வி சார்ந்த முதலீடுகளை வடக்கில் மேற்கொள்வதில்லை என்றும் வடக்கிற்கும் தெற்குக்கும் இடையில் பாரிய வளப் பகிர்வுக் குறைபாடுகள் இருப்பதாகவும் சிலர் குறிப்பிடுகின்றனர். இத்தகைய ஒரு சூழமைவில் தமிழ் மாணவர்களின் கல்வித் தரம் தொடர்ச்சியாக வீழ்ச்சிப் போக்கைச் சந்தித்து வருவதாகக் கூறப்படுகின்றது.

இவை தொடர்பான கருத்துக்களுக்கான விளக்கங்கள் வழங்குவதை விட்டு, வடமாகாணம் உண்மையில் கல்வியில் வீழ்ச்சி அடைந்துள்ளதா? என்பது தொடர்பாகக் கடந்த பத்து ஆண்டுகால பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்து பார்க்கும் பொழுது, வடமாகாணம் கல்வியில் பின் தங்கியிருக்கவில்லை என்பதையும், அதேவேளை ஏனைய மாகாணங்கள் வடமாகாணத்தைவிடக் கல்வி அபிவிருத்தியில் விரைவான முன்னேற்றத்தை அடைந்துள்ளதாக புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

மாணவர்களினதும், பெற்றோரினதும், அதிபர், ஆசிரியர்களினதும் வினைத்திறன் மிக்க செயற்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் சில பின்னணித் தகவல்களையும் ஆலோசனைகளையும், வழங்குவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

**ஓர் ஆசிரியர் மாணவர்களுடன் எவ்வாறான உறவு நிலையைப் பேண வேண்டும்?:**

ஓர் ஆசிரியர் அல்லது அதிபர் என்பவர் தம்மிடம் கற்க வருகின்ற பிள்ளைகளின் வளர்ப்புத் தாய், தந்தையர்கள் (FOSTER PARENTS) என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். தனது பிள்ளைகளுக்குச் சமமான பார்வையைக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறான அன்னியோன்னியமான உறவு நிலை பேணப்படும் பொழுதே ஆசிரியர்கள் மீது மாணவர்களுக்கு நம்பிக்கை ஏற்படும். அப்பொழுதுதான் அங்கே சுதந்திரமான கற்றல் என்பது நிகழும். கல்வியின் பின்னடைவு பற்றிய பகுப்பாய்வுகளை மேற்கொள்ளும் முன்னர், மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் தாக்கத்தை ஏற்படுத்துவதில் ஆசிரியர்களினதும், அதிபர்களினதும் வகிபாகம் என்பது முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டும். பாடசாலைகளின் ஒட்டுமொத்தமான அபிவிருத்தி என்பதில் அதிபரின் பங்கே 100 வீதமாக உள்ளது. அதே போன்று மாணவர்களின் கல்வி அபிவிருத்தியின் அடைவு மட்டம் மற்றும் ஒழுக்க விழுமியங்களுக்கு வகைகூற வேண்டியவர்களும் ஆசிரியர்களே என்பதையும் ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். யுனெஸ்கோவினால் (UNESCO) வெளியிடப்பட்ட எம்.சம்கியுட்ட என்ற கல்வியியலாளரின், 'EDUCATION ON THE MORE' என்ற நூலில் ஒரு ஆசிரியரின் வகிபாகம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கின்றார்:

1. மாணவர்கள் கற்கும் முறைகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்துபவர்.
2. மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுபவர்.
3. கல்வியின் மூல வளங்களைச் சேகரித்துப் பாதுகாப்பதுடன், அவற்றை மாணவர்கள் பயன்படுத்துவதற்கேற்ற வகையில் வழிகாட்டல்களை மேற்கொள்பவர்.
4. மாணவர்களின் தேவைகளையும், கல்வியின் நோக்கங்களையும் நிறைவு செய்யும் வகையில் முழுக் கல்விச் செயற்பாட்டையும் ஒருங்கிணைப்பவராக இருப்பவர்.

யுனெஸ்கோவின் இந்தக் குறிப்புக்களையும், எமது குழந்தைகளின் எதிர்பார்ப்புக்களையும் நிறைவு செய்யக்கூடியவர்களாக எமது ஆசிரியர்கள் தம்மை வளர்த்துக் கொள்ளவேண்டும். அதனையே எமது மாணவர்களும் எதிர்பார்க்கின்றனர் என்பதை கடந்த சில வருடங்களுக்கு முன்னர் 'மாணவர்களின் எதிர்பார்க்கைகள்' என்பது தொடர்பாக மேற்கொண்ட ஆய்வின்பொழுது, தனது ஆசிரியர் எவ்வாறு இருக்க வேண்டும் என்று மாணவர்களிடம் கருத்துக் கணிப்பு எடுக்கப்பட்ட பொழுது, அவர்களால், ஒவ்வொருவராலும் முன் வைக்கப்பட்ட கருத்துக்கள் ஒரு நல்லாசிரியர் எப்படி இருக்கவேண்டும் என்பதை வெளிப்படுத்தியது:

1. ஆசிரியர் சமூகத்தின் குறிகாட்டியாக இருப்பதுடன், முன்மாதிரியானவராக இருத்தல் வேண்டும்.
2. எனது ஆசிரியர் எப்பொழுதும் மகிழ்ச்சியாகவும், சிரித்த முகத்துடனும் இருக்க வேண்டும். முகத்தைக் கடுகடுப்பாக வைத்திருக்கக்கூடாது.
3. எங்கள் மீது அன்பாகவும், கருணை உள்ளவராகவும் எப்பொழுதும் இருக்க வேண்டும்.
4. எங்களைப் பாகுபாடு காட்டி நடக்காதவராகவும், சமத்துவமாகவும் நடத்துதல் வேண்டும்.
5. எங்களிடம் இருக்கின்ற திறமைகளையும், ஆற்றல்களையும் சரியான முறையில் இனங்கண்டு, ஒவ்வொருவரின் திறமைக் கேற்ப தெரிவு செய்து போட்டிகளுக்கு அனுப்புவபவராகவும், உரிய பயிற்சிகளை வழங்கி வழிகாட்டுபவராகவும் இருத்தல் வேண்டும்.
6. தினமும் ஏதாவது புதிய தகவல்களை அல்லது விடயங்களை எங்களுக்கு வழங்கிக் கொண்டிருப்பவராக இருத்தல் வேண்டும்.
7. நவீன கற்றல் சாதனங்களை பயன்படுத்தி கற்பிப்பவராக இருத்தல் வேண்டும்.
8. எங்கள் ஒவ்வொருவரினதும் பிரச்சினைகளைச் சரியாக விளங்கிக் கொள்பவராகவும், அவற்றை நியாயபூர்வமான முறையில் தீர்த்து வைக்க முன்வருபவராகவும் இருத்தல் வேண்டும்.
9. எங்களுடைய கவலைகள், குடும்பச் சூழல் மற்றும் எங்களின் தேவைகளை அவதானமாக செவிமடுப்பவராகவும், அவ்வப்போது ஆலோசனைகளை வழங்குபவாகவும் இருக்க வேண்டும்.
10. எங்களைப் பெயர் சொல்லி அழைக்கும் உரிமை உள்ளவராக இருத்தல் வேண்டும்.
11. நல்ல அழகான ஆடைகளை அணிந்து வருபவர்களாகவும், எடுப்பான தோற்றத்தை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
12. எங்களை மகிழ்வூட்டும் வகையில் இடையிடையே வெளிக்களச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்பவராகவும் இருத்தல் வேண்டும்.
13. கற்றல் வளங்களைச் சேகரித்து எங்களுக்குக் காட்சிப்படுத்தி அதில் எங்களையும் ஈடுபடுத்துபவராகவும் இருத்தல் வேண்டும்.
14. எங்களுடைய வீட்டிற்கு வந்து எங்களுடைய பெற்றோருடன் அளவளாவுபவராக இருத்தல் வேண்டும்.

2012ஆம் ஆண்டில் நான் கல்வி அமைச்சில் கடமையாற்றியபொழுது சில மாணவர்களை எழுந்தமானமாகச் சந்தித்துக் கலந்துரையாடிய பொழுது அவர்களிடம் இருந்து பெறப்பட்ட கருத்துக்கள்தான் இவை. அந்த வகையில் மாணவர்களினால் விரும்பப்படுகின்ற ஓர் ஆசிரியர் எப்படிப் பட்டவராக இருக்க வேண்டும் என்பதை அவர்களுடைய உள்ளக் கிடக்கைகள் புலப்படுத்துகின்றன.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் கல்வி அபிவிருத்தியை உயர்த்துவதைப் பற்றிச் சிந்திப்பதற்கு முன்னர் பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் திறனுள்ள ஆசிரியர் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை அறிவதற்கான குறிகாட்டிகளாக இவை இருக்கின்றன.

